CASE NO. CC 80/2024

Date 26.06.2025

பெயர் PW 1 - கற்பகமூர்த்தி த/பெ மாரிமுத்து

**(எதிரி ஆஜர்).**

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:-**

1) எதிரி எனது பெரியம்மா மகள் என்றால் சரிதான். எதிரியின் கணவர் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எதிரியின் மகளும் இறந்துவிட்டார் என்றால் சரிதான். எதிரி வாடகை வீட்டில் தான் வசித்து வருகிறார் என்றால் சரிதான். நான் ஷேர் ஆட்டோ ஓட்டிவருகிறேன் என்றால் சரிதான். நான் ஷேர் ஆட்டோவை வங்கி கடன் பெற்றுத் தான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் செலுத்தி வருகிறேன்.

2) நான் எந்த ஆண்டு முதல் வருமான வரி செலுத்தி வருகிறேன் என்றால் 2023 ம் ஆண்டு முதல் செலுத்தி வருகிறேன். எனது உடன்பிறந்த சகோதரியின் பெயர் சண்முகப்பிரியா என்பவரை நாகேந்திரன் என்பவருக்கு திருமணம் செய்து கொடுத்துள்ளோம் என்றால் சரிதான். எனது தங்கை மற்றும் அவரது கணவர் நாகேந்திரனுடன் நான் நல்ல உறவில் இருந்து வருகிறேன் என்றால் சரிதான். ஆட்டோ லோன் தவிர வேறஎதாவது லோன் வாங்கியுள்ளேனா என்றால் இல்லை.

3) நான் எந்தெந்த வங்கிகளில் வங்கி கணக்கு வைத்துள்ளேன் என்றால் நான் சிவகங்கை SBI வங்கியில் வங்கி கணக்கு வைத்துள்ளேன். எனது வங்கி வரவு, செலவு கணக்கு சம்பந்தமான ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். நான் வருமான வரிக் கணக்குகளை நீதிமன்றத்தில் தாக்கல் தயாராக உள்ளேனா என்றால் உள்ளேன். கடந்த 06.08.2023 ம் தேதியில் எதிரிக்கு கடன் கொடுத்தாக சொல்லப்படும் ரூபாய் 16 லட்சத்தை கொடுப்பதற்கு எனக்கு போதிய வருமானம் கிடையாது என்றால் சரியல்ல எனது அப்பா

Web copy

இறப்பதற்கு முன்பு சொத்துக்களை விற்று எனக்கு சேரவேண்டிய பாகத் தொகையை கொடுத்தார் அந்த தொகையைத் தான் நான் எதிரிக்கு கொடுத்தேன்.

4) மேற்படி சங்கதிகளை எனது நிரூபண வாக்குமூலம், வழக்கறிஞர் அறிவிப்பு, புகார் மனு ஆகியவற்றில் கூறவில்லை என்றால் சரியல்ல. எனது சகோதரி சண்முகப்பிரியாவிற்கு திருமணம் செய்த சமயத்தில் எதிரியுடன் நன்றாக பேசி வந்தேன் என்றால் சரிதான். எதிரி தனது மகளுக்கு வாங்கி வைத்திருந்த சீர்வரிசைப் பொருள்களை எனது சகோதரி சண்முகப்பிரியா திருமணத்தின் போது அவருக்கு கொடுத்தார் என்றால் சரிதான்.

5) என்னுடைய சகோதரி திருமணத்திற்கு செலவு செய்ய பணம் இல்லாததால் எதிரி எனது சகோதரி திருமணத்திற்கு சீர், வரிசை கொடுத்து உதவினார் என்றால் சரியல்ல. நான் எதிரிக்கு 06.08.2023 ம் தேதி ரூபாய் 16 லட்சம் கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் எனது சகோதரிக்கோ அவரது கணவருக்கோ தெரியுமா என்றால் தெரியாது. 06.08.2023 ம் தேதி எனது மைத்துனர் நாகேந்திரன் எதிரிக்கு ரூபாய் 13 லட்சம் கடன் கொடுத்ததாக சொல்லப்படும் விவரம் அப்போது எனக்குத் தெரியுமா என்றால் அப்போது எனக்குத் தெரியாது வழக்குத் தாக்கல் செய்த பிறகு தான் தெரியும்.

6) எதிரிக்கு ரூபாய் 16 லட்சம் பணத்தை வட்டியில்லாமல் தான் கொடுத்தேன் என கட்சி செய்கிறேன் என்றால் சரிதான். ரூபாய் 16 லட்சம் வட்டியில்லாமல் கடனாகக் கொடுப்பதற்கு வாய்ப்பு இல்லை என்றால் சரிய்லல. எனது வழக்கறிஞர் அறிவிப்பு, நிரூபண வாக்குமூலம், புகார் மனு ஆகியவற்றில் எங்கு வைத்து எதிரிக்கு பணம் கொடுத்தேன் என கூறியுள்ளேனா என்றால் கூறவில்லை. நான் எதிரிக்கு பணம் கொடுக்கும்போது செக்யூரிட்டிக்காக ஆவணங்கள் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான்.

7) கூடுதல் ஆவணங்கள் எதுவும் வாங்காமல் பெரிய தொகையை கடனாகக் கொடுக்க வாய்பில்லை என்றால் சரியல்ல. வழக்கில் கூறப்பட்டுள்ள ரூபாய் 16 லட்சத்தை தவிர எதிரி எனக்கோ நான் எதிரிக்கோ எந்த தொகையும் கொடுக்க வேண்டியதில்லை என்றால் சரிதான் நான் ரூபாய் 16 லட்சம் கொடுப்பதற்கு முன்பு எதிரிக்கு பணம் கொடுத்தேன். நான் எந்த தேதியில் எவ்வளவு தொகை கொடுத்தேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை ஆனால் ரூபாய் 5 லட்சம் கொடுத்துள்ளேன்.

Webcopy

8) ரூபாய் 5 லட்சம் கொடுக்கும் போது ஆவணம் எதுவும் வாங்கவில்லை என்றால் சரிதான். ரூபாய் 5 லட்சத்தை எப்போது எதிரி திருப்பிக் கொடுத்தார் என்றால் வங்கிக் கணக்கை பார்த்தால் தான் தெரியும் தற்போது சாட்சி கூறுகிறார் கையில் ரூபாய் 3 லட்சம் கொடுத்ததாக கூறுகிறார். எனது மைத்துனர் நாகேந்திரன் காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், சிவகங்கையில் பணிபுரிந்தார் என்றால் சரிதான். தற்போது எங்கு பணிபுரிகிறார் என்று எனக்குத் தெரியாது.

9) வழக்கு காசோலையை வசூலுக்கு தாக்கல் செய்த பிறகு எதிரி என் மீதும் எனது மைத்துனர் நாகேந்திரன் என்பவர் மீதும் வழக்கு காசோலையை தவறாக பயன்படுத்தியதாக காவல் துறை கண்காணிப்பாளர் அலுவலகம், சிவகங்கை அவர்களிடம் புகார் மனு கொடுத்து அந்த புகார் மனு விசாரணைக்காக குன்றக்குடி காவல் நிலையத்தில் ஆஜர் ஆனோம் என்றால் சரிதான். மேற்படி விசாரணையில் காசோலை சம்பந்தப்பட்ட வழக்கு என்பதால் நீதிமன்றத்தில் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு அறிவுறுதப்பபட்ட து என்றால் சரிதான்.

10) எனது மைத்துனர் காவல் துறையில் பணியாற்றி வந்ததால் அவரது செல்வாக்கைப் பயன்படுத்தி எதிரி கொடுத்த புகார் மனு மீது நடவடிக்கை எடுக்காமல் செய்து விட்டார் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டடப்படும் காசோலையில் உள்ள கையெழுத்து மற்றும் பூர்த்தி செய்யப்ட்ட விவரங்கள் வேறு வேறு மையினால் எழுதப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது எதியிடம் தான் கேட்க வேண்டும். இந்த காசோலையை எதிரி தான் பூர்த்தி செய்தார் என்று உறுதியாக கூறமுடியாது சரிதான்.

11) 2022 ம் ஆண்டுக்கு முன்பாக எதிரி எனது மைத்துனர் நாகேந்திரன் ரூபாய் 3 லட்சம் கடன் வாங்கியிருந்தார் என்றும் அதற்கு ஆதரவாக வழக்கு காசோலையையும் அதே இந்தியன் ஓவர்சீஸ் வங்கி காசோலை எண். 000011 என்ற காசோலையும் பூர்த்தி செய்யாமல் செக்யூரிட்டிக்காக கையொப்பம் மட்டும் செய்து என மைத்துனரிடம் கொடுத்திருந்தார் என்றும் அந்த காசோலைகளில் வழக்கு காசோலையை எனது மைத்துனர் பூர்த்தி செய்து என் மூலமாக வசூலுக்காக தாக்கல் செய்தார் என்றும் சொன்னால் சரியல்ல.

webcopy

12) 06.08.2023 ம் தேதி எதிரி என்னிடம் எந்த தொகையும் கடன் வாங்கவில்லை என்றும் மேற்படி தேதியில் ரூபாய் 16 லட்சம் கொடுப்பதற்கு போதிய வசதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. வருமான வரி கணக்கு எப்போது தாக்கல் செய்துள்ளேன் என்றால் கணக்கைப் பார்த்தால் தான் தெரியும். ரூபாய் 16 லட்சம் தொகையை எதிரி கடனாக வாங்குவதற்கு எதிரிக்கு தகுதி இல்லை என்று சொன்னால் சரியல்ல. எனது மைத்துனர் வேண்டு கோளுக்கிணங்க வழக்கு காசோலையை வைத்து இந்த பொய்யான வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

13) ரூபாய் 20 ஆயிரத்திற்கு மேல் கடன் கொடுக்கவேண்டும் என்று சொன்னால் வங்கியின் மூலம் தான் பரிவர்த்தனை செய்யவேண்டும் என்று சொன்னால் அது பற்றி எனக்குத் தெரியாது. வழக்கு காசோலைக்கு எந்த மறுபயன் இல்லை என்றால் சரியல்ல. வருமான வரி கணக்கு இந்த வழக்கிற்காக தயார் செய்யப்பட்ட ஆவணம் என்றால் சரியல்ல. எதிரி குற்றமற்றவர் என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்குரியது என்றால் சரியல்ல.

சாட்சி அரசு எதிரிதரப்பு வழக்கறிஞர்கள் முன்னிலையில் திறந்த நீதிமன்றத்தில் சொல்லச்சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக்காட்டி அவரால் சரியென்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

**(ஒம்)திரு.P.செல்வம், 26.06.2025,**
நீதித்துறை நடுவர் எண். 1,
சிவகங்கை.

Web Copy